# மராத்தியர்கள்

தக்காணம் மற்றும் மஹாராஷ்டிரா மலைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் "மராத்தியர்கள்" என்று அழைக்கப் பட்டனர். மராத்திய மாநிலத்தின் இயற்கை அமைப்பு அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே சிறப்புத் தன்மைகளை உருவாக்கியது. தக்காணத்தை ஆட்சி புரிந்த ஷியா பிரிவைச் சேர்ந்த அரசர்களிடம் மராத்தியர்கள் பணியாற்றி வந்தனர். அப்பகுதியில் காணப்பட்ட கோட்டைகள் மற்றும் மலைப் பகுதிகள், பகைவர்களிடம் இருந்து மராத்தியர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்கின. "கொரில்லா" என்ற போர் முறையை மராத்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

"கொரில்லா" போர் முறை என்பது "முறைசாரா போர்முறை" ஆகும். மராத்தியர்கள் மலைகளுக்கிடையே ஒளிந்து கொண்டு திடீரென்று எதிரிகளை தாக்கும் முறையாகும்.

முஸ்லீம்களின் செயல்பாடுகளால் ஏற்பட்ட வெறுப்பு மற்றும் பக்தி இயக்கம் மராத்தியர்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கியது. பக்தி இயக்கத் தலைவர்களான துக்காராம், ராம்தாஸ், ஏக்நாத் மற்றும் வாமன்பண்டித் போன்றவர்கள், கடவுள் பக்தியையும் மற்றும் ஒரு வலிமையான தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வையும் தோற்றுவித்தனர். இத்தகைய சூழ்நிலையில் சிவாஜி ஒரு மாபெரும் தலைவராகத் தோன்றினார். இவரது தலைமையில் மராத்தியர்கள் வலிமை மிக்கவர்களாகத் தோன்றி முகலாயர்களை எதிர்க்க முனைந்தனர்.

## சிவாஜி (கி.பி.1627–கி.பி.1680)

பூனாவிற்கு அருகில் உள்ள சிவனேரி கோட்டையில் கி.பி.1627–ஆம் ஆண்டு



சிவாஜி பிறந்தார். பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றி வந்த ஷாஜி பான்ஸ்லே இவரது தந்தையாவார். இவரது தாய் ஜிஜாபாய். ஷாஜி பான்ஸ்லே துக்காபாய் என்பவரை இரண்டாவது மணம் புரிந்து கொண்டதால், முதல் மனைவி ஜிஜாபாய் மற்றும் மகன் சிவாஜியைப் புறக்கணித்தார். இருப்பினும், தாதாஜி கொண்டதேவ் சிவாஜியின் காப்பாளர் ஆனார். இவர் சிவாஜியை போற்றி பராமரித்தார். சிவாஜி, சிறு வயது முதற்கொண்டு இராமாயண மகாபாரதக் கதைகள் மற்றும் புராணங்களைத் தனது தாய் மூலம் கற்று உணர்ந்தார். பக்தி பெண்மணியாக விளங்கிய இவரது தாய், சிவாஜியை நல்வழிப்படுத்தினார். இவருடைய குரு குதிரைப் பயிற்சி மற்றும் நிர்வாகப் பயிற்சிகளை பயிற்றுவித்தார்.

### படையெடுப்புகள்

சிவாஜி, முஸ்லீம்களின் கீழ் பணியாற்ற வெறுப்பு கொண்டார். எனவே, சுதந்திரமான பேரரசு ஒன்றினை தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டார். புரந்தர், ரெய்கார், தோர்னா மற்றும் கல்யாண் ஆகிய கோட்டைகளை பிஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி. 1646–ல் கைப்பற்றினார்.

### சிவாஜியும் பீஜப்பூர் சுல்தானும்

சிவாஜியின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை அடைந்த பிஜப்பூர் சுல்த்தான், சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டுவரும்படி அப்சல்கான் என்பவரை கி.பி.1659 ஆம் ஆண்டு அனுப்பினார். அப்சல்கானின் சூழ்ச்சியை சிவாஜி தெரிந்து கொண்டு, அவரை சந்திக்க தகுந்த பாதுகாப்புடன் சென்றார். சிவாஜியும்–அப்சல்கானும் ஒருவரை ஒருவர் சந்தித்து தழுவிக் கொண்டனர். அச்சமயத்தில் அப்சல்கான் சிவாஜியின் கழுத்தை நெறித்து கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் சிவாஜி தனது உடையில் மறைத்திருந்த புலிநகத்தால் அப்சல்கானைக் கிழித்துக் கொலை செய்தார். இதனால் சிவாஜியின் பெருமையும், புகழும் மேலும் அதிகரித்தது.

### சிவாஜியும் முகலாயர்களும்

முகலாய மன்னராக பொறுப்பேற்ற ஔரங்கசீப், தனது தக்காண ஆளுநர் செயிஷ்டகானை கி.பி1660ஆம் ஆண்டு சிவாஜியை அடக்க அனுப்பினார். செயிஷ்டகான், பூனா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தார். இதனை அறிந்த சிவாஜி அவரை சந்திக்க திருமண கோஷ்டியினர் போன்று மாறுவேடம் பூண்டு செயிஸ்டகான் தங்கி இருந்த இடத்தை அடைந்தார். அப்போது செயிஸ்டகான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். சிவாஜி அவரைத் தாக்க முற்பட்டார். ஆனால் செயிஸ்டகான் அங்கிருந்து உயிர் தப்பினார். அவரது கட்டை விரல் துண்டிக்கப்பட்டது.

ஔரங்கசீப், சிவாஜியை அடக்க இரண்டாவது முறையாக ராஜா ஜெய்சிங் என்பவரை அனுப்பினார். முகலாயர்படை சிவாஜியை சூழ்ந்துகொண்ட சூழ்நிலையில், சிவாஜி வேறு வழியின்றி அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட தயாரானார். இவரது முயற்சியால் கி.பி.1665–ஆம் ஆண்டு புரந்தர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி சிவாஜி ஔரங்கசீப்பை சந்திக்க ஒப்புக்கொண்டார். தனது மகன் சாம்பாஜியுடன் ஔரங்கசீப்பை சந்திக்க கி.பி.1666–ஆம் ஆண்டு ஆக்ரா சென்றார். அங்கு சிவாஜி அவமானப் படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டார். பழக்கூடை ஒன்றின் மூலம், சிறையிலிருந்து சிவாஜி உயிர் தப்பினார். ஔரங்கசீப்பால் சிவாஜியை ஒன்றும் செய்ய இயலவில்லை. சிவாஜியை "மலை எலி" என்றும் "தக்காண புற்றுநோய்" என்றும் அழைத்தார். சிவாஜி–முகலாயர்களின் தீவிர எதிரியானார். இதன்பிறகு, சிவாஜி பல்வேறு கோட்டைகளைக் கைப்பற்றி, மராத்திய பேரரசை பலப்படுத்தினார்.

கி.பி.1674–ஆம் ஆண்டு ரெய்கார் கோட்டையில் சிவாஜியின் முடிசூட்டு விழா நடைபெற்றது. சிவாஜி "சத்ரபதி" என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். இந்த முடிசூட்டு விழாவின் மூலம் புதிய பேரரசு (மராத்திய பேரரசு) தோன்றியது. முடிசூட்டு விழாவிற்குப் பிறகு ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் கர்நாடக படையெடுப்பை மேற்கொண்டார். செஞ்சி, வேலூர் மற்றும் பல்வேறு கோட்டைகளைக் கைப்பற்றினார். இவரது பேரரசு மைசூர், கொ

மற்றும் மஹாராஷ்டிரா வரை பரவியிருந்தது. கி.பி.1680–ஆம் ஆண்டு சிவாஜி ரெய்காரில் உயிர் துறந்தார்.

## சிவாஜியின் நிர்வாகம்

சிவாஜி ஒரு சிறந்த நிர்வாகி. மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டார். நிர்வாகத்தில் தனக்கு உதவி செய்ய 8 நபர்களைக் கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைத்தார். இது "அஷ்டப்பிரதான்" என்று அழைக்கப்பட்டது.

யாருடைய அரசவையில் அஷ்டதிக்கஜங்கள்–நவரத்தினங்கள் இருந்தனர்

1. பீஷ்வா (பிரதம அமைச்சர்)
2. மந்திரி (காலமுறை அமைச்சர்)
3. சச்சிவா (உள்துறை அமைச்சர்)
4. சுமந்த் (வெளியுறவு அமைச்சர்)
5. சேனாதிபதி – (இராணுவ அமைச்சர்)
6. அமத்தியா (நிதி அமைச்சர்)
7. பண்டிட்ராவ் (சமயத் தலைவர்)
8. நியாயதீஷ் (நீதித் துறை)

ஒவ்வொரு அமைச்சரும் ஒரு துறைக்கு பொறுப்பாவார். பேரரசு பல மாநிலங்களாக அல்லது பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டிருந்தன. இவை மேலும் பர்கானாக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. சிவாஜியின் பேரரசு "சுயராஜ்யம்" என்று அழைக்கப்பட்டது.

## வருவாய்த்துறை நிர்வாகம்

சிவாஜி ஜமின்தாரி முறையை ஒழித்தார். விவசாயிகளிடம் நேரிடையான தொடர்பை ஏற்படுத்தினார். நிலங்கள் கவனமாக அளக்கப்பட்டு நிலத்தீர்வை மேற்கொள்ளப்பட்டது. விளைச்சலில் (2/5) ஐந்தில் இரண்டு பகுதி அரசின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. இதைப் பணமாகவோ, தானியமாகவோ செலுத்தலாம். பஞ்சம் மற்றும் அவசர காலங்களில் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. நிலவரித்திட்டம் அக்பர் காலத்தில் ராஜாதோடர்மால் பின்பற்றிய முறையை ஒட்டி அமைந்திருந்தது. இதுதவிர சுங்கத் தீர்வை, தொழில்வரி வசூலிக்கப்பட்டன. சவுத், சர்தேஷ்முகி என்ற இரண்டு முக்கிய வரிகள் வசூலிக்கப்பட்டன.

அரசுக்கு நாம் செலுத்தும் சில வரிகளைப் பட்டியலிடுக.

## நீதித்துறை நிர்வாகம்

சிவாஜி ஆட்சிகாலத்தில் இந்துமதச்சட்டங்களின் அடிப்படையில் நீதி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. கிராமங்களில் வழக்குகளை கிராமப் பஞ்சாயத்து சபை தீர்த்து வைத்தது. பட்டேல் என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார். அனைத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல் முறையீட்டினை நியாயதீஷ் என்ற அதிகாரி விசாரணை செய்தார். இவர் அமைச்சரவையில் ஓர் உறுப்பினராவார்.

## இராணுவ நிர்வாகம்

சிவாஜி ஒரு சிறந்த வீரராகவும், இராணுவத் தளபதியாகவும் விளங்கினார். இவர் கட்டுப்பாடான நிரந்தர இராணுவத்தைப் பராமரித்தார். இவரது இராணுவத்தில் காலாட்படை, குதிரைப் படை, பீரங்கிப் படை, யானைப்படை, ஒட்டகப்படை மற்றும் கப்பற்படை இடம் பெற்றிருந்தன. குதிரைப்படை முக்கிய படைப் பிரிவாக கருதப்பட்டது. இராணுவ நிர்வாகத்தில் கோட்டைகள் முக்கிய அங்கம் வகித்தன. மராட்டியர்கள் கோட்டைகளைத் தாயாகக் கருதினர்.

வீரர்களுக்கு சம்பளமாக பணம் வழங்கப்பட்டது. வீரரர்கள் இறந்த பிறகு அவரது குடும்பத்தினரும் பராமரிக்கப்பட்டனர். இராணுவ முகாமில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. ராணுவம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் போது விளைச்சலுக்கு எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தக் கூடாது என ஆணையிடப் பட்டிருந்தது. வீரர்கள், பெண்கள், குழந்தைகள்மற்றும் வயதானவர்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது என வீரர்களுக்கு கட்டளையிடப்பட்டது.

### மதிப்பீடு

சிவாஜி முறையான படிப்பறிவு அற்றவராக இருப்பினும், நாட்டின் முக்கியமான பிரச்சனைகளை எளிதாக புரிந்து கொண்டு திறமையாக அவற்றிற்கு தீர்வு கண்டார். வலிமையான மராத்திய பேரரசை உருவாக்கியது இவரது மாபெரும் சாதனையாகும். இவரது ஆட்சி முகலாயர்களுக்குப் பெரும்சவாலாக அமைந்தது. தனது தந்திரமான நடவடிக்கைகளின் மூலம் மராத்தியப் பேரரசை புகழின் உச்சநிலைக்கு கொண்டு சென்றார்.

### சிவாஜியின் வழித்தோன்றல்கள்

சிவாஜியின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் சாம்பாஜி பேரரசராகப் பொறுப்பேற்றார்–இவர் தந்தைக்கேற்ற தனையனாக இருக்க வில்லை. ஔரங்கசீப் பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டாவை கைப்பற்றிய பிறகு, சாம்பாஜி மற்றும் அவருடைய மகன் ஷாகுவை கைது செய்தார். சாம்பாஜி சிறையிலேயே கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து சிவாஜியின் மற்றொரு மகனான ராஜாராம் மராத்திய பேரரசராகப் பொறுப்பேற்றார். கி.பி.1700- ஆம் ஆண்டு ராஜாராமின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது மனைவி தாராபாய் தனது சிறுவயது மகனான இரண்டாம் சிவாஜியை மன்னராக்கி நிர்வாகத்தை தானே மேற்கொண்டார். முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு முதலாம் பகதூர்ஷா பொறுப்பேற்றார். இவர் சிறையில் இருந்த ஷாகுவை விடுதலை செய்தார். இதனால் மராத்தியப் பேரரசில் ஷாகு மற்றும் தாராபாய் இடையே உள்நாட்டுப் போர் தோன்றியது. இதில் தாராபாய் தோற்கடிக்கப்பட்டு, ஷாகு மராத்திய பேரரசராக கி.பி.1708–ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். இதற்கு பாலாஜி விஸ்வநாத் என்பவர் மூலகாரணமாக விளங்கினார். எனவே அவரை “பீஷ்வா” அல்லது “பிரதம அமைச்சராக” ஷாகு நியமனம் செய்தார். சிவாஜியின் வழித்தோன்றல்கள் திறமை குறைந்தவர்களாக காணப்பட்டதால் பீஷ்வா மராத்திய பேரரசின் ஆட்சியாளரானார். இவர்கள் உண்மையான ஆட்சியாளர்களாகவும், திறமையான நிர்வாகிகளாகவும் திகழ்ந்தனர்.

### பீஷ்வாக்கள்

மராத்திய பேரரசில் “பிரதம அமைச்சர்கள்” பீஷ்வாக்கள் என்றழைக்கப்பட்டனர். கி.பி.1713 ஆம் ஆண்டு பீஷ்வாக்களின் ஆட்சி தொடங்கியது.

### பீஷ்வா பாலாஜி விஸ்வநாத் (கி.பி.1713–கி.பி.1720)

மராத்திய மன்னர் ஷாகுவின் ஆட்சிக்குப்பின் முதல் பீஷ்வாவாக பாலாஜி விஸ்வநாத் பொறுப்பேற்றார். இவர் பீஷ்வா பதவியை பரம்பரையாக்கினார். சௌத், சர்தேஷ்முகி போன்ற வரிகளை வசூல் செய்ய நிலமானிய பிரபுக்களை நியமனம் செய்தார். மராத்திய பேரரசின்

சமூக அறிவியல்

பெருமையை மீண்டும் புதுப்பித்தார். கி.பி.1720 ஆம் ஆண்டு இவர் மரணமடைந்தார்.

### பீஷ்வா பாஜிராவ் (கி.பி.1720–கி.பி.1740)

பாலாஜி விஸ்வநாத் மரணத்திற்கு பிறகு அவரது மகன் பாஜிராவ் பீஷ்வாவாகப் பொறுப்பேற்றார். இவர் திறமையானவர். இதனால் இவர் பீஷ்வாக்களில் தலைசிறந்தவராக போற்றப்படுகிறார். மராத்திய பேரரசை வடக்கு பகுதியில் விரிவுபடுத்த விரும்பினார். எனவே "முற்போக்கு கொள்கையை" கடைப்பிடித்தார். ஹைதராபாத் நிஜாமை அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி செய்தார். போர்ச்சுகீசியர்களிடமிருந்து பஸ்சின், தானா மற்றும் சால்செட் போன்ற இடங்களை கைப்பற்றினார். இவர் கி.பி.1770–ஆம் ஆண்டு இறந்தார். இவரது காலத்தில் மராத்திய பேரரசு வலிமை மிக்கதாக விளங்கியது.

### பீஷ்வா பாலாஜி பாஜிராவ் (கி.பி.1740–கி.பி.1761)

இவர் மூன்றாவது பீஷ்வா ஆவார். தனது உறவினரான சதாசிவராவ் என்பவரின் வழிகாட்டுதலின் பேரில் கி.பி.1758–ல் மராத்திய பேரரசின் பெருமையையும், புகழையும் உச்சநிலைக்கு கொண்டு சென்றார். பஞ்சாபைக் கைப்பற்றி அட்டாக் கோட்டையில் மராத்தியக் கொடியை பறக்கவிட்டார். கி.பி.1761–ல் மராத்திய பேரரசு புகழின் உச்ச நிலையை அடைந்தது. ஆனால் அப்பேரரசு அகமதுஷாஅப்தாலியின் படையெடுப்பினால் சீர்குலைந்தது.

### மூன்றாவது பானிப்பட் போர் (கி.பி.1761)

மராத்தியர்கள் பஞ்சாபைக் கைப்பற்றிய செயல் ஆப்கானிய அரசரான அகமதுஷாஅப்தாலியுடன் மோதலை உருவாக்கியது. ரோஹில்கண்டு அரசர் நாஜிப்–உத்–தௌலா மற்றும் அயோத்தி நவாப் ஷுஜா உத்தௌலா ஆகியோரின் உதவியோடு இந்தியாவின் மீது அகமதுஷாஅப்தாலி படையெடுப்பை மேற்கொண்டார். வரலாற்றுப் புகழ்மிக்க பானிப்பட் சமவெளியில் கி.பி.1761–ல் சதாசிவராவ் தலைமையிலான மராத்தியப் படைகளை சந்தித்தார். இது வரலாற்றில் மூன்றாம் பானிப்பட் போர் என்று அழைக்கப்படுகிறது. சதாசிவராவ் தனது பீரங்கிப்படையின் வலிமையின் மீது அதிக நம்பிக்கை கொண்டு போரில் ஈடுபட்டார். ஆனால் அகமதுஷாஅப்தாலி மராத்தியர்களுக்கு இடையிலான அனைத்து தொடர்பையும் துண்டித்தார். ஆரம்பத்தில் போர் மராத்தியர்களுக்கு அனுகூலமாக இருந்த போதிலும், இறுதியில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இப்போர் மராத்தியர்களின் விதியை நிர்ணயம் செய்தது. மேலும் இப்போரின் முடிவு ஆங்கிலேயர்களின் எழுச்சிக்கு வழிவகுத்தது.

### மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்கள்

மராத்தியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை மற்றும் கொள்ளையடித்தல் கொள்கை தோல்விக்கு வழிவகுத்தது.

மராத்தியர்கள் தங்கள் இனத்தவர்களின் ஆதரவை இழந்தனர், இராஜபுத்திரர்கள், ஜாட்டுகள் மற்றும் சீக்கியர்கள் மராத்தியர்களை வெறுத்தனர். மராத்தியர்களின் இராணுத்தைவிட, அகமதுஷாஅப்தாலியின் இராணுவம் சிறந்த பயிற்சி பெற்று கட்டுப்பாட்டுடன் விளங்கியது, மராத்தியர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கவில்லை.

மராத்தியர்களின் தலைவர்கள் அகமதுஷா அப்தாலிக்கு எந்த விதத்திலும் இணையானவர்கள் அல்ல.

மூன்றாம் பானிப்பட் போருக்குப் பிறகு மாராத்திய பேரரசை திறமையற்ற பீஷ்வாக்கள் ஆட்சி செய்தனர். இது மராத்தியர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததோடு மட்டுமின்றி இந்தியாவில் அவர்களின் செல்வாக்கு சரியவும் வழிவகுத்தது.

## நாதிர்ஷா படையெடுப்பு (கி.பி.1739)

பாரசீகத்தில் தோன்றிய தலைசிறந்த போர்வீரராக நாதிர்ஷா விளங்கினார். சாதாரணக் கால்நடைகளை பராமரிப்பவராக விளங்கிய நாதிர்ஷா, தனது திறமைகள் மூலமாக உயர்நிலையை அடைந்தார். கி.பி.1739ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுப்பை மேற்கொண்டார். இதற்கு முக்கிய காரணங்கள், நாதிர்ஷா இந்தியாவின் இயற்கை செல்வத்தை கொள்ளையடிக்க எண்ணினார். பெரும் வெற்றி வீரனாகத் திகழ வேண்டும் என்றும் கருதினார். இந்தியாவை ஆட்சி செய்து வந்த முகமது ஷா நாட்டினை ஆளும் திறமையற்றவர் என்பதை உணர்ந்து இந்தியாவின் மீது படையெடுக்க முடிவெடுத்தார்.

## போரின் நிகழ்வுகள்

இந்தியாவை ஆட்சி செய்து வந்த முகமதுஷாவை, ஆப்கானிய வீரர்களுக்கு புகலிடம் அளிக்க கூடாது என வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இதனை முகமதுஷா ஏற்க மறுத்ததால் அவரை தண்டிக்க கி.பி.1739ஆம் ஆண்டு நாதிர்ஷா இந்தியா மீது படையெடுத்தார். பெஷாவரைக் கைப்பற்றி முகலாயர்களை கர்ணல் என்ற இடத்தில் எதிர்த்துப் போரிட்டார். முகலாயப் பேரரசரை தண்டிக்க டெல்லி நோக்கி படையெடுத்துச் சென்றார். முகலாயப் பேரரசர் 20 கோடி ரூபாயை போர் இழப்பீட்டாக கொடுத்து தன்னை காப்பாற்றிக் கொண்டார். இத்தொகையைப் பெற்ற நாதிர்ஷா டெல்லியில் 15 நாட்கள் தங்கி தனது மனம் போனபடி டெல்லியை சூறையாடினார். இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். முகலாய மன்னரும் கொல்லப்பட்டார்.

நாதிர்ஷா கோஹினூர் வைரம் மற்றும் மயிலாசனத்தையும் விட்டுவைக்க வில்லை. சுமார் இரண்டு மாதங்களுக்கு பிறகு மாபெரும் கொள்ளை பொருட்களுடன் தனது நாட்டுக்கு திரும்பினார். இருப்பினும் இவர் தனது படைவீரர்களாலேயே கி.பி.1747–ல் கொல்லப்பட்டார்.


## விளைவுகள்

நாதிர்ஷா படையெடுப்பு முகலாயப் பேரரசிற்கு சாவு மணி அடித்தது. அதன் வீழ்ச்சியை துரிதப்படுத்தியது. முகலாயப் பேரரசு அவமானப்படுத்தப்பட்டு அதன் திறமையின்மை உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. முகலாயர்களின் திறமையின்மை, மராத்தியர்கள், ஜாட்டுகள், சீக்கியர்கள், ரோஹிலர்கள் போன்றோர்கள் வளர்ச்சியடைய வழிவகுத்தது. இந்தியாவின் செல்வவளம் சூறையாடப்பட்டது. சுருங்கக்கூறின் நாதிர்ஷாவின் படையெடுப்பு, இந்தியாவை "இரத்த பூமியாக" மாற்றியது.


## அகமதுஷா அப்தாலி படையெடுப்பு (கி.பி.1761)

ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வந்த, அப்தாலி இனப் பிரிவின் தலைவர், அகமதுஷா அப்தாலி ஆவார். நாதிர்ஷாவின் மரணத்தைத் தொடர்ந்து அகமதுஷா அப்தாலி, ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சியாளரானார்.

# மராத்தியப் பேரரசு



வ
மே
கி
தெ

பீஜப்பூர்
சூரத்
பம்பாய்
பல்லாரி
கோவா
வேலூர்
செஞ்சி
சென்னை
தஞ்சாவூர்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இலங்கை
இந்தியப் பெருங்கடல்

கி.பி.1748–முதல் கி.பி.1767– வரையிலான காலத்தில் இந்தியாவின் மீது பல முறை படையெடுப்புகளை மேற்கொண்டார்.

### காரணங்கள்

நாதிர்ஷாவைப் போன்று இந்தியாவின் பெரும் செல்வத்தைச் சூறையாடுவதை நோக்கமாகக் கொண்டு படையெடுத்தார். படையெடுப்புகளின் மூலம் தனக்கு பெயரும், புகழும் கிடைக்க விரும்பினார்.

### போர் நிகழ்வுகள்

கி.பி. 1761–ஆம் ஆண்டு மூன்றாவது பானிப்பட் போரில் மராத்தியர்களை சந்திப்பதற்கு முன்பாக, அகமதுஷா அப்தாலி நான்கு முறை இந்தியாவின் மீது போர்தொடுத்தார். பஞ்சாபை கைப்பற்றி, டெல்லியை அடைந்து அந்நகரை சூறையாடினார். மதுரா, ஆக்ரா மற்றும் பல்வேறு இடங்களில் கொள்ளையடித்தார். கி.பி.1761–ஆம் ஆண்டு மராத்தியர்களை பானிப்பட் என்ற இடத்தில் சந்தித்து, அவர்களைத் தோற்கடித்து மராத்தியர்களை சீர்குலைத்தார். இது மூன்றாவது பானிப்பட் போர் என்று அழைக்கப் படுகிறது. கி.பி.1767–ம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக பஞ்சாப் மீது படையெடுப்பை மேற்கொண்டார். ஆனால் இவரால் அதனை மேற்கொள்ள முடியாமல், ஆப்கானிஸ்தானத்திற்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

### விளைவுகள்

அகமதுஷா அப்தாலின் படையெடுப்பு மராத்திய பேரரசின் வீழ்ச்சிக்கு சாவுமணி அடித்தது. இந்தியாவின் செல்வம் சூறையாடப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டனர். இவரது படையெடுப்பு பஞ்சாப் முழுவதும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இது சீக்கியர்கள் ஒன்றுபட்டு வலிமை பெற ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அகமதுஷா அப்தாலின் படையெடுப்பு மராத்திய மற்றும் முகலாயர்களின் ஆட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியதால் ஆங்கிலேயர்கள் தங்களின் இறையாண்மையை இந்தியாவில் நிலைநாட்டினர்.

## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. சிவாஜியின் காப்பாளர்___________ ஆவார்.

   அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) ஷாஜி பான்ஸ்லே இ) பாஜிராவ்

2. சிவாஜியின் அமைச்சரவைக் குழுவான அஷ்டப்பிரதானில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை___________.

   அ) 7 ஆ) 8 இ) 9

3. முதல் பீஷ்வா ___________ ஆவார்.

   அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) பாலாஜி பாஜிராவ் இ) பாஜிராவ்

4. புரந்தர் உடன்படிக்கை___________என்பவருக்கும் சிவாஜிக்கும் இடையே ஏற்பட்டது.

   அ) ராஜா ஜெய்சிங் ஆ) அப்சல்கான் இ) செயிஸ்டகான்

சமூக அறிவியல்

II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மராத்தியர்கள்____________போர் முறையை பின்பற்றினார்கள்

2. பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை அடக்க____________என்பவரை அனுப்பினார்.

3. மராத்தியப் பேரரசில் பிரதம அமைச்சர்____________என்றழைக்கப்பட்டார்.

4. ஔரங்கசீப்பின் மரணத்திற்கு பிறகு____________முகலாய மன்னரானார்.

III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. பாஜிராவ் | பாரசீகம் |
| 2. நாதிர்ஷா | அஷ்டப்பிரதான் |
| 3. நியாயதீஷ் | ஆப்கானிய அரசர் |
| 4. அகமதுஷா அப்தாலி | முற்போக்கு கொள்கை |

IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. மூன்றாவது பானிப்பட் போர் எந்த ஆண்டு நடைபெற்றது ?
2. இந்தியா மீது நாதிர்ஷா எந்த வருடம் படையெடுத்தார் ?
3. புரந்தர் உடன்படிக்கை எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது ?
4. “மலைஎலி” என்றழைக்கபப்ட்டவர் யார் ?

V) குறுகிய விடையளி.

1. சிவாஜிக்கும் அப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற மோதலைப் பற்றி சுருக்கமாக விளக்கு.
2. சிவாஜி செயிஸ்டகானை எவ்வாறு எதிர்த்தார் ?
3. மூன்றாம் பானிப்பட் போரில் மராத்தியர்கள் தோல்வியுற காரணங்கள் யாவை ?
4. நாதிர்ஷாவின் இந்தியபடையெடுப்பு பற்றி குறிப்பு எழுக.

VI) விரிவான விடையளி.

1. சிவாஜியின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றி விவரி.
2. பீஷ்வாக்களின் கீழ் மராத்தியர்களின் பேரரசு பற்றி எழுதுக.

**உருவாக்க மதிப்பீடு**

**குழு செயல்பாடு:**

1. சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக நடித்தல்.
2. மத்திய மாநில அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் பெயர்களையும் அவர்களது துறைகளையும் பட்டியலிடுக.
3. மராத்தியர் கால முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிப்பிடுக.

# ஐரோப்பியர்கள் வருகை

இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே மிகப் பழங்காலந்தொட்டு வாணிபத் தொடர்பு காணப்பட்டது. இத்தொடர்பு அலெக்ஸாண்டர் வருகையால் மேலும் வலுவடைந்தது. இந்தியப் பொருள்களான பட்டு, நறுமணப் பொருட்கள் மற்றும் மஸ்லின் கைத்தறி ஆடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல தேவை காணப்பட்டது. இந்தியாவிலிருந்து மிளகு, மிளகாய், பட்டை, இஞ்சி, தேங்காய், சர்க்கரை, சாயப் பொருட்கள் போன்றவை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இவை முக்கிய மூன்று வழித்தடங்கள் மூலம் நடைபெற்றது அவையாவன :

ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் காஸ்பியன் கடல்வழியாக கருங்கடல் தரைப்பகுதி வரையிலும், பாரசீகம் மற்றும் சிரியா வழியாக மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா வரையிலும், அரபிக்கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் வழியாக கடல்மார்க்கம் ஆகிய மூன்று வழித்தடங்கள் வாயிலாக வியாபாரம் நடைபெற்றது.

கி.பி.1453 – ஆம் ஆண்டு ஆட்டோமானிய துருக்கியர்கள் காண்ஸ்டாண்டிநோபிள் நகரத்தைக் கைப்பற்றி ஐரோப்பிய வணிகர்களுக்கு இடையூறு தந்தனர், வாணிபத்திற்கு தடைவிதித்தனர். ஆப்கானிஸ்தான் வழியாக நடைபெற்ற வாணிபத்திற்கும் தடைவிதித்தினர். அராபியர்கள் படையெடுப்பின் விளைவாக மற்ற இரண்டு வழித்தடங்களும் கி.பி.8ஆம் நூற்றாண்டில் தடைபட்டன. எனவே ஐரோப்பியர்கள் இந்தியப் பொருட்களின்றி அவதியுற்றனர். எப்படியாவது இந்தியப் பொருட்களை பெறவேண்டும் என்று பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக இந்தியாவிற்கு புதிய கடல்வழி காணும் முயற்சியில் இறங்கினர்.

## போர்ச்சுகீசியர்கள்

இந்தியாவிற்கு புதிய கடல் வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் இறங்கியவர்கள் போர்ச்சுகீசியர்கள் ஆவர். போர்ச்சுகீசிய மன்னரான இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்க அறிவியல் முறையில் அமைந்த பள்ளி ஒன்றைத் தொடங்கினார். இவருக்கு கடல் பயணத்தின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக “மாலுமி ஹென்றி” என்று போற்றப்பட்டார்.

## பார்த்தலோமியோ டயஸ்

போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த பார்த்தலோமியோ டயஸ் என்பவர் கி.பி.1487–ம் ஆண்டு முதன்முதலில் கடல் பயணத்தினை மேற்கொண்டார். இவர் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை வந்தடைந்தார். அச்சமயத்தில் அங்கு புயல் அதிகமாக வீசியதால் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனைக்கு “புயல் முனை” என்று பெயரிட்டார். இதனை கடந்து சென்றால் புதிய பகுதிகளை காணலாம் என நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதனால் புயல்முனை, “நன்னம்பிக்கைமுனை” என அழைக்கப்பட்டது.

## வாஸ்கோடகாமா

போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையை கடந்து, மே–27,1498–ஆம்

சமூக அறிவியல்

ஆண்டு இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கோழிக்கோடு (கள்ளிக்கோட்டை) வந்தடைந்தார். கள்ளிக்கோட்டை மன்னர் சாமொரின் அவரை வரவேற்று உபசரித்தார். மேலும் போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் நடத்த அனுமதி வழங்கினார். இதனைத் தொடர்ந்து போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்ய தொடங்கினர். இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கள்ளிக்கோட்டை, கொச்சின், கண்ணணூர் ஆகிய இடங்களில் வாணிபத்தளங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

### பிரான்சிஸ் கோ–டி–அல்மெய்டா (கி.பி.1505–கி.பி.1509)

இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வாணிபத்தை கவனிக்க பிரான்சிஸ்கோ–டி–அல்மெய்டா என்பவர் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் அரேபிய வியாபாரிகளைத் தோற்கடித்து போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். கப்பற்படையை வலிமை பெறச் செய்து இந்தியப் பெருங்கடல் பகுதியில் போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கை உறுதி செய்தார். இவரது கொள்கை "நீலநீர்க் கொள்கை" ஆகும். இதன் மூலம் குடியேற்றப் பகுதிகளை முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கி.பி.1509–ஆம் ஆண்டு அல்மெய்டா எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்.

### அல்போன்ஸே–டி–அல்புகர்க்

போர்ச்சுகீசியரின் இரண்டாவது ஆளுநராக அல்புகர்க் பதவியேற்றார். இவர் மாபெரும் வெற்றியாளராகத் திகழ்ந்தார். பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி.1510ஆம் ஆண்டு கோவாவைக் கைப்பற்றி அதனை தலைநகரமாக மாற்றினார். விஜயநகர பேரரசுடன் தனது உறவை பலப்படுத்திக் கொண்டார். தூரக்கிழக்கு பகுதியில் அமைந்திருந்த மலாக்கா தீவை கைப்பற்றினார். பாரசீக வளைகுடாவில் ஆர்மஸ் என்ற இடத்தில் துறைமுகம் ஒன்றினைக் கட்டினார். இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை உண்மையாக நிலைநாட்டியவர் என்று இவர் போற்றப்படுகிறார். இவர் ஒரு சிறந்த நிர்வாகி. இந்துக்களோடு சுமூகமான உறவை ஏற்படுத்தினார். கல்வி வளர்ச்சிக்காக பல பள்ளிகளை திறந்தார். போர்ச்சுகீசியர்கள் இந்தியப் பெண்களை திருமணம் செய்துகொள்வதை ஊக்குவித்தார். இவரின் சமயக் கொள்கை முஸ்லீம்களுக்கு எதிரானது. இதனால் முஸ்லீம்களின் செல்வாக்கை இவர் இழக்கத் தொடங்கினார். இவர் கி.பி.1515–ஆம் ஆண்டு கோவாவில் காலமானார். இவரது மறைவிற்கு பிறகு போர்ச்சுகீசியர்கள் டையூ, டாமன், பம்பாய், இலங்கை, சால்செட், பஸின், ஹூக்ளி போன்ற பகுதிகளை கைப்பற்றினர். சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களின் ஆதிக்கம் படிப்படியாக இந்தியாவில் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

### போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

அல்புகர்க்குப் பின் வந்தவர்கள் திறமையற்றவர்கள். இவர்களால் போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கைக் கட்டிக்காக்க முடியவில்லை. போர்ச்சுகீசியர்கள் வலுக்கட்டாயமாக மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏராளமான இந்தியர்களை கிறித்துவ மதத்திற்கு மாற்றினர். முஸ்லீம்களுக்கு எதிரான கொள்கை பகைமையை ஏற்படுத்தியது. போர்ச்சுகீசியர்கள், விஜயநகரப் பேரரசுடன் மட்டுமே உறவு கொண்டிருந்தனர். ஆனால் விஜய நகர பேரரசு கி.பி.1565-ஆம் ஆண்டு

நடைபெற்ற தலைக்கோட்டைபோருக்குப் பின் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இது போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. கி.பி.1580–ம் ஆண்டு போர்ச்சுக்கல், ஸ்பெயின் கட்டுப்பாட்டில் வந்தது. எனவே இவர்களால் குடியேற்றங்கள் மீது கவனம் செலுத்த முடியவில்லை. டச்சு மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை போர்ச்சுகீசியரின் செல்வாக்கு இந்தியாவில் வீழ்ச்சி அடைய வழிவகுத்தது.

## டச்சுக்காரர்கள்

போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். கி.பி.1602–ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டைச் சார்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து டச்சு கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனத்தை தோற்றுவித்தனர். இவர்கள் கீழை நாடுகளுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களுக்கு இந்தியாவின் மீது அதிக ஆர்வம் இல்லை. நறுமணத் தீவுகளின் மீது இவர்கள் அதிக நாட்டம் செலுத்தினர். இருப்பினும் இவர்கள் இந்தியாவில் சின்சுரா, நாகப்பட்டினம், சூரத் மற்றும் மசூலிப்பட்டினத்தில் தங்கள் வாணிப மையங்களை நிறுவினர். கி.பி.1610–ஆம் ஆண்டு “புலிகட்” என அழைக்கப்படும் பழவேற்காட்டில் தங்கள் வாணிப தலத்தை நிறுவி, அங்கு கோட்டை ஒன்றை கட்டினர். இது டச்சுக்காரர்களின் தலைமை இடமாகத் திகழ்ந்தது. சூரத், புரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, காசிம்பஜார் போன்ற இடங்களில் வாணிப தலங்களை நிறுவினர்.

## அம்பாய்னா படுகொலை

இதற்கிடையில் ஆங்கிலேயர்கள் இந்தோனேசியாவில் வியாபாரம் செய்ய வியாபாரிகளை அனுப்பினர். இதனை டச்சுக்காரர்கள் ஏற்கவில்லை. எனவே கி.பி.1623–ஆம் ஆண்டு அம்பாய்னா என்ற இடத்தில் ஆங்கில வியாபாரிகளைக் கொன்றனர். இது “அம்பாய்னா” படுகொலை என்றழைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி ஆங்கிலேயர்கள், மற்றும் டச்சுக்காரர்கள் இடையே பகையை உருவாக்கியது. இதன் பிறகு ஆங்கிலேயர்கள் நறுமணத் தீவுகளை விட்டு வெளியேறி இந்தியா மீது முழு கவனத்தை செலுத்தினர்.

ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களுக்குப் போட்டியாக இந்தியாவில் வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களுடன் போட்டிபோட முடியாமல் டச்சுக்காரர்கள், தங்கள் வாணிப மையங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினர்.

## ஆங்கிலேயர்கள்

கி.பி.1588–ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரிய போர்க்கப்பலான “ஸ்பானிய ஆர்மடா” என்ற கப்பலை ஆங்கிலேயர்கள் தோற்கடித்து, ஐரோப்பாவில் அதிக கடல் வலிமை பெற்ற நாடாக இங்கிலாந்து விளங்கியது. இதனைத் தொடர்ந்து கீழ்த்திசை நாடுகளுடன் வாணிப நடவடிக்கையில் இறங்கினர். நூறு லண்டன் நகர வியாபாரிகள் ஒன்று சேர்ந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை தோற்றுவித்தனர். இக்கம்பெனிக்கு டிசம்பர்–31, 1600–ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத், வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார். கி.பி.1608ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் கொடுத்த வியாபாரம் செய்ய கோரிய அனுமதி கடிதத்துடன் வில்லியம் ஹாக்கின்ஸ்

என்ற ஆங்கில மாலுமி, ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்தார். ஆனால் தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து கி.பி.1615–ஆம் ஆண்டு சர்தாமஸ் ரோ என்ற மற்றொரு ஆங்கில மற்றும் ஜஹாங்கீர் அரசவைக்கு வருகை புரிந்தார். இவர் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்கான அனுமதியை பெற்றார். இதனை தொடர்ந்து ஆங்கிலேயர்கள் சூரத், ஆக்ரா, பரோச், அகமதாபாத் ஆகிய இடங்களில் வாணிப மையங்களை ஏற்படுத்தி இந்தியாவுடன் வாணிபத்தை மேற்கொண்டனர்.

கி.பி.1639–ஆம் ஆண்டு "பிரான்ஸிஸ் டே" என்ற ஆங்கில அதிகாரி சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி தற்கால சென்னை நகரை நிறுவினார். இங்கு கி.பி.1640–ஆம் ஆண்டு புனித ஜார்ஜ்கோட்டை கட்டப்பட்டது. இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகல் நாட்டு இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு சீர்வரிசையாக பம்பாய் கொடுக்கப்பட்டது. இதனை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆண்டொன்றுக்கு 10- பவுண்டுக்கு வாடகைக்கு விட்டார். கி.பி.1699–ஆம் ஆண்டு முகலாயர் மன்னர் ஔரங்கசீபின் அனுமதி பெற்று கல்கத்தாவில் மற்றொரு வாணிப மையத்தை ஏற்படுத்தினார். இங்கு இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக வில்லியம் கோட்டை கட்டப்பட்டது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் மேலும் பல வாணிப மையங்களை ஏற்படுத்தி இந்தியாவுடன் தீவிரமாக வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ்வாறு கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம், செல்வாக்கு கி.பி.1858–ஆம் ஆண்டு வரை இந்தியாவில் விரிவுபடுத்தப்பட்டது.


### டேனியர்கள்

டென்மார்க் நாட்டைச் சார்ந்த மக்கள் டேனியர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்களும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். கி.பி.1620–ஆம் ஆண்டு தரங்கம்பாடியிலும், 1676–ஆம் ஆண்டு வங்காளத்திலுள்ள சீராம்பூர் என்ற இடத்திலும் வாணிப மையங்களை ஏற்படுத்தினர். ஆனால் இவர்கள் தங்கள் வாணிபத்தலங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு, இந்தியாவை விட்டு வெளியேறினர்.

### பிரெஞ்சுக்காரர்கள்

மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போன்று பிரான்சும், இந்தியாவுடனான வியாபாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டது. பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரின் முயற்சியால், பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கி.பி.1664–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள் இந்தியாவுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். கி.பி.1668–ஆம் ஆண்டு சூரத்திலும், கி.பி.1669–ஆம் ஆண்டு மசூலிப்பட்டினத்திலும் வாணிபத் தலங்களை நிறுவினர். கி.பி.1674–ஆம் ஆண்டு தஞ்சாவூர் மன்னரிடமிருந்து சென்னைக்கு தெற்கே ஒரு நிலப்பகுதியை பெற்று பாண்டிச்சேரியை நிறுவினர். இது பிரெஞ்சுக்காரர்களின் தலைமை இடமாக மாறியது. கி.பி.1690ஆம் ஆண்டு சந்திரநாகூரில் மற்றொரு வாணிப தலத்தையும் நிறுவினர். கி.பி.1725–ஆம் ஆண்டு மாஹியையும், கி.பி.1739–ஆம் ஆண்டு

# இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள்
# போர்ச்சுகீசியர்கள், டச்சுகாரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்



காரைக்காலையும் பெற்றனர். கி.பி.1742–ஆம் ஆண்டு டியூப்ளே பிரெஞ்சு கவர்னராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் மேலும் வளர்ச்சி அடைந்தது. இதற்கிடையில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆதிக்கப் போட்டி தொடங்கியது. இது இந்தியாவில் கர்நாடக போர்களாக பிரதிபலித்தது. இதன் இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்று, இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். பிரெஞ்சுகாரர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறினர்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடு.

1. மாபெரும் வாணிப மையமான ____________ ஆட்டோமானிய துருக்கியர்களால் கி.பி.1453–ல் கைப்பற்றப்பட்டது.

   அ) ஆப்கானிஸ்தான் ஆ) கான்ஸ்டாண்டிநோபிள் இ) பலுசிஸ்தான்

2. ____________ முதல் போர்ச்சுகீசியர் ஆளுநராவார்.

   அ) பிரான்ஸிஸ்கோ–டி–அல்மெய்டா ஆ) அல்போன்ஸோ–டி–அல்புகர்க் இ) பார்த்லோமியோ டயஸ்

3. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்ட ஆண்டு ____________ ஆகும்.

   அ) கி.பி.1600 ஆ) கி.பி.1644 இ) கி.பி.1664

4. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிடமாக ____________ விளங்கியது.

   அ) சந்திர நாகூர் ஆ) பாண்டிச்சேரி இ) மாஹி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. போர்ச்சுகீசியர்கள் கோவாவை ____________ சுல்தானிடமிருந்து கைப்பற்றினர்
2. வில்லியம் ஹாக்கின்ஸ் பயணம் மேற்கொண்டபோது இந்தியாவின் முகலாய மன்னர் ____________ ஆவார்.
3. கி.பி ____________ ஆண்டு சர்தாமஸ்ரோ இந்தியாவிற்கு வந்தார்.
4. கி.பி.1742–ஆம் ஆண்டு ____________ என்பவர் பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. வாஸ்கோடகாமா | இங்கிலாந்து |
| 2. மாஹி | பிரெஞ்சுக் குடியேற்றம் |
| 3. நறுமணத் தீவுகள் | போர்ச்சுக்கீசிய மாலுமி |
| 4. முதலாம் ஜேம்ஸ் | கிழக்கிந்தியத் தீவு |

IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?
2. பிரான்ஸிஸ்டே என்பவர் யார் ?
3. புனித ஜார்ஜ்கோட்டை எங்கு அமைந்துள்ளது ?
4. நன்னம்பிக்கை முனை எந்த கண்டத்தில் அமைந்துள்ளது ?

V) குறுகிய விடையளி.

1. போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கம் இந்தியாவில் வீழ்ச்சி அடைய மூன்று காரணங்களை எழுது.
2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி எவ்வாறு பம்பாயைப் பெற்றது ?
3. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் வாணிப மையங்களை குறிப்பிடுக.
4. அல்புகர்க் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

VI) விரிவான விடையளி.

1. இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வளர்ச்சி பற்றி விவரி.
2. டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஏற்படுத்திய வாணிப மையங்களை பற்றி எழுது.

VII) செய்முறைப் பயிற்சி.

1. இந்திய நதிகள் வரைபடத்தில் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் வாணிபத் தலங்களை குறிப்பிடுக.
2. புனித ஜார்ஜ்கோட்டைக்குப் பயணம் செய்து, அதைப்பற்றி தெரிந்துகொள்க.

**உருவாக்க மதிப்பீடு**

1. உலகப்படத்தில் ஐரோப்பியா கண்டத்தை தனி வண்ணமிட்டுக் காட்டுக.
2. ஐரோப்பாவில் உள்ள நாடுகளின் பெயர்களை நிலவரைபடத் தொகுப்பின் உதவிகொண்டு எழுதுக.
3. புதிய கடல்வழிக் கண்டுபிடிப்பாளர்களின் பெயர்களையும், கண்டுபிடித்த இடங்களையும் பட்டியலிடுக.
4. இந்தியாவிற்கு முதன்முதலில் கடல்வழி கண்டுபிடித்தவர் யார் என அறிந்து அவர் கண்டுபிடித்த வழியை உலக வரைபடத்தில் குறிக்க.
5. இந்தியாவில் போர்ச்சுக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் வணிகத்தலங்களை இந்திய புறவரி நிலவரைப்படத்தில் குறிக்கவும்.
6. இந்தியாவில் ஆங்கிலேயர்களின் கோட்டைகளை பற்றிய தகவல்களைச் சேகரிக்க.
7. உனது மாவட்டத்தில் உள்ள கோட்டைகள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும்.